செ.வெ.எண் : 26 நாள்: 11.09.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ், செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாநில திட்டக்குழுத் துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் மாநில திட்டக்குழுத் துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ், செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் இன்று (11.09.2021) ஆய்வு மேற்கொண்டார்.

**அதன் விவரம் பின்வருமாறு:**

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ், **சுகாதாரத்துறையின் மூலம்** வாங்கியுள்ள கூடுதல் சுகாதார உபகரணங்கள்,கொசு விரட்டும் இயந்திரம், தாய் சேய்களை அழைத்து வரும் வாகனம் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்தும், துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் தரம் குறித்தும், **கல்வித்துறையின் மூலம்** கல்வியில் பின்தங்கிய மாணவிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் குறித்தும், **வேளாண்மைத்துறையின் மூலம்** வேளாண்மை பயிற்சி மையங்கள், ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம், விவசாயிகளுக்கு பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிப்பதற்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை குறித்தும், **ஊரக வளர்ச்சி துறையின் மூலம்** திறன் மேம்பாட்டு கட்டிடங்கள், தார் சாலை வசதி, சுற்றுச்சுவர் ஆகிய பணிகளின் தன்மை குறித்தும், குரும்பலூர் **பேரூராட்சியின் மூலம்** பழங்குடி மக்களுக்கு (இருளர்) மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை வசதிகள் குறித்தும், **மகளிர் திட்டத்தின் மூலம்** கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்ததுவதற்காக திருப்பூரிலிருந்து வந்து பின்னலாடை நிறுவனம் அமைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி முறைகள் குறித்தும், நரிக்குறவர்கள், மண்பாண்டம் தயாரிக்கும் தொழிலாளர்கள் மற்றும் மரசிற்ப தொழில் செய்யும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவது மற்றும் அவர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், செயற்கை செங்கல் தயாரிக்கும் பணியின் தன்மை குறித்தும், சத்துமிகு சிறுதானியங்கள் இயற்கை முறையில் விளைவித்து சந்தைப்படுத்தும் விவரங்கள் குறித்தும், பெண் விவசாயிகளுக்கு தீவின பயிர்கள் குறைவில்லாமல் கிடைப்பதற்கு பசுந்தீவனம் தயாரித்து வழங்கும் பணிகள் குறித்தும், பெரிய வெண்மணி கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் நவீன மண் செங்கல் தயாரித்தல் இயந்திரத்தின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் குறித்தும், குரும்பலூர், பாரதிதாசன் பல்கலைகழகத்தில் முதுகலை பட்ட விரிவாக்க மையத்தில் கல்வி தரத்தின் சதவீதத்தை உயர்த்த

மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும், ஏழை மாணவ,மாணவிகளின் கல்வி மேற்படிப்பு தரத்தினையும் கட்டுமான வசதிகளையும் உயர்த்தும் பொருட்டு புதிய கட்டிடம் கட்டுவது குறித்தும், **ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம்**, ஆலத்தூர் வட்டாரத்தில் 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் வளரிளம் பெண்களுக்கு ஆரோக்கியத்தினை மேம்படுத்த இணை உணவு வழங்கும் முறைகள் குறித்தும், **நீர்வள ஆதாரம்(பொதுப்பணித்துறை) மூலம்** வேளாண் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் விசுவக்குடி அணைக்கட்டில் நீர் கொள்ளளவை அதிகப்படுத்த நிலப்பரப்பை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி சுற்றுப்புற சுவர்களை கல்லால் பரத்தும் பணிகள் தன்மை மற்றும் பயன்பாடு குறித்தும், **பட்டு வளர்ச்சித்துறையின் மூலம்** பட்டு உற்பத்தி செய்து விவசாயிகள் பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து அரசு அங்காடியில் விற்பனை செய்யும் விதம் குறித்தும், **வேளாண் விற்பனைத்துறையின் மூலம்** சிறு,குறு விவசாயிகளின் சிறிய வெங்காயத்தினை தோல் உறிக்கும் இயந்திரங்கள் பயன்பாடு மற்றும் செயல்பாடுகள் குறித்தும் மாநில திட்டக்குழுத் துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக (10.09.2021) அன்று பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாலிகண்டபுரம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நன்னை மற்றும் குரும்பலூர் பேரூராட்சி பகுதிகளில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ், செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் குறித்து மாநில திட்டக் குழுத் துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திரு.சி.ராஜேந்திரன், திட்ட இயக்குநர்(ஊரக வளர்ச்சி முகமை) திருமதி அ.லலிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ம.பாரதிதாசன், புள்ளியியல் அலுவலர் திரு.இரா.விஜயகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.